செ.வெ.எண்:27 நாள்:24.9.2021

# பத்திரிக்கைச் செய்தி

டேராடூனில் உள்ள இராஷ்ட்ரீய இந்திய இராணுவக் கல்லூரியில் ஜூலை 2022-ஆம் ஆண்டிற்கான 8 ஆம் வகுப்பு சேர்க்கைக்கு விண்ணப்பிக்க அறிவிக்கப்பட்டுள்ளது. 01.07.2022 அன்று 11½ முதல் 13 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். (02.07.2009-க்கு முன்னதாகவும் 01.01.2011-க்கு பின்னதாகவும் பிறந்திருக்கக்கூடாது). மேலும், 01.07.2022-ல் அங்கீகரிக்கப் பெற்ற பள்ளியில் 7ஆம் வகுப்பு படிப்பவராகவோ அல்லது ஏழாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவோ உள்ள ஆண் சிறார்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்களின் (சிறுவர்களின்) பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் தமிழ்நாட்டில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

இச்சேர்க்கைக்கான விண்ணப்பப்படிவம், தகவல் தொகுப்பேடு மற்றும் முந்தைய தேர்விற்கான வினாத்தாள் தொகுப்பை விரைவு அஞ்சலில் பெற பொதுப்பிரிவினர் ரூ.600/- க்கும், SC/ST இனத்தவர் சாதிச்சான்றுடன் ரூ.555/- க்கும் “THE COMMANDANT R I M C DEHRADUN அவர்களுக்கு உத்ரகாண்ட, டேராடூன், டெல் பவன், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி கிளையில் (வங்கி குறியீடு-01576) மாற்றத்தக்க வகையில் வரைவோலை எடுத்து The Commandant, RIMC, Dehradun, Uttarakhand State-248 003 என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் (இரட்டையாக) தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் சாலை, பூங்கா நகர், சென்னை-600 003 என்ற முகவரிக்கு 30.10.2021-க்குள் அனுப்ப வேண்டும். இதற்கான நுழைவுத் தேர்வு 18.12.2021 அன்று நடைபெறும்.

மேலும் விவரங்கள் அறிய www.rimc.gov.in என்ற இணையதளத்தில் காணலாம் அல்லது நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத் தரைத்தளத்தில் அறை எண். 10 மற்றும் 11-ல் இயங்கி வரும் முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தினை நேரில் தொடர்பு கொள்ளுமாறு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.இரா.லலிதா, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.